## வெள்ளகோவில் நகராட்சி, திருப்பூர் மாவட்டம்

**2019–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04–ம் தேதி நடைபெற்ற அவசரக் கூட்டம்**

**தீர்மானம் நகல்கள்**

**தீர்மானம் எண் : 210 / 2019, நாள் : 04.09.2019**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP 2019-20) 2019-2020-ன்கீழ் ரூ. 7.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்: 17349/2019/இ3, நாள் : 03.09.2019–ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு மானிய நிதி / நில அபிவிருத்திக் கட்டணம் | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|
| வெள்ளகோவில் | 7.00 | 2.45 | 3.15 | 1.40 |

எனவே மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், கீழ்க்காணும் பணியை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றி நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண். 12 புள்ளசெல்லிபாளையம் காலனி முதல் மூத்தநாயக்கனூர் சாலை, வார்டு எண்.11 செம்மாண்டம்பாளையம் சாலை முதல் மூலனூர் சாலை வரை தார்சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண். 14 அகலரப்பாளையம்புதூர், வார்டு எண்.17, எல்.கே.ஏ.நகர், வார்டு எண். 19 கே.பி.சி.நகர், வார்டு எண். 12 கரட்டுப்பாளையம், கரட்டுப்பாளையம் அரிஜன காலனி பகுதிகளில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை புதுப்பித்தல் | 200.00 |
| 2 | வார்டு எண். 14, தண்ணீர்பந்தல், வார்டு எண். 9 உரக்கிடங்கு முதல் கள்ளமடை சாலை மற்றும் வார்டு எண். 2 கல்லாங்காட்டுவலசு பகுதிகளில் தார்சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண். 12 புள்ளசெல்லி பாளையம், வார்டு எண். 1 திருச்சி கோவை ரோடு பிரிவு உப்புப்பாளையம் சாலையில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை புதுப்பித்தல் | 200.00 |
| 3 | வார்டு எண். 11 மடாமேடு முதல் சொரியங்கிணத்துப் பாளையம் பகுதியில் தார்சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண். 13, கணபதிபாளையம் முதல் ஒரம்புபாளையம் சாலை, வார்டு எண்.3 அறிவொளிநகர், வார்டு எண். 18 தாராபுரம் சாலை முதல் சீரங்கராயகவுண்டன்வலசு சாலை மற்றும் வார்டு எண். 13 அரியாண்டிவலசு பகுதிகளில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை புதுப்பித்தல் | 200.00 |

| | | |
|---|---|---|
| 4 | வார்டு எண்.2 ரெட்டிவலசு பகுதியில் தார்சாலை அமைத்தல், புதுப்பித்தல் மற்றும் வார்டு எண். 3 எம்.ஜி.நகர் பகுதியில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை புதுப்பித்தல் | 100.00 |
| | **மொத்தம்** | **700.00** |

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1125 / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 211 / 2019, நாள் : 04.09.2019**

திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் உத்தரவு மற்றும் ஆய்வுக்கூட்ட அறியுரையின்படி வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முதலமைச்சர் அவர்களின் சிறப்புக் குறை தீர்க்கும் திட்ட முகாம் 21 வார்டுகளிலும் 27.08.2019 முதல் 31.08.2019 ஆகிய ஐந்து நாட்களில் நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் ஆய்வுக்கூட்ட அறிவுரையில் மேற்படி முகாம் நடைபெறும் விபரத்தை பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்தவும் தேவையான முன்ஏற்பாடுகளை செய்யவும் அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஐந்து நாட்களுக்கு முகாம் நடைபெறும் இடங்களை பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்த நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அதிக பொதுமக்கள் கூடும் நான்கு இடங்களில் விளம்பரப் பலகைகள் வைக்கவும் துண்டு பிரசுரங்கள் வழங்கவும், ஆட்டோ மூலம் பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்தவும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 21,000 /–ம் ஆகும். மேற்படி செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1200 / 2019 / அ2)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 212 / 2019, நாள் : 04.09.2019**

வெள்ளகோவில் நகராட்சியில் பணிபுரிந்து வரும் பொது சுகாதார துப்புரவு பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர், ஓட்டுநர்கள், காவலர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகியோருக்கு தீபாவளிப்பண்டிகை 2019–2020 ஆம் ஆண்டிற்கு சீருடை துணிகள், தையல் கூலி மற்றும் காலணிகள் வாங்கி வழங்கவும், அவற்றை வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1,25,000 /–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம். செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
2) பணியாளர்களுக்கு சீருடை துணிகள் அரசு நிறுவனமான கோ–ஆப்டெக்ஸில் வாங்கவும், காலணிகள் சர்வோதயா சங்கத்தில் வாங்கி வழங்கவும், பட்டியல் தொகையை இந்நிறுவனங்களுக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 814 / 2016 / எப்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 213 / 2019, நாள் : 04.09.2019</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் 08/2019 முதல் வார்டு எண். 1 முதல் 10 வரை உள்ள பகுதிகளில் ஏற்படும் குடிநீர் குழாய் பழுதுகளை பழுது நீக்கம் செய்ய மதிப்பீடு அங்கீகாரம் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தற்பொழுது குடிநீர் அவசர அவசியம் கருதி பராமரிப்பு பணிகள் அவ்வப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே புதியதாக ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணி உத்தரவு வழங்கும்வரை ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த விலையில், அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தாரரை 08/2019 மாதம் மட்டும் பணியினை மேற்கொள்ள அங்கீகாரம் வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 1,50,000 /–ம் அனுமதிக்காக.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியில் அவசர அவசியம் கருதி ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தாரரை தனி அலுவலர் / ஆணையாளர் அவர்களின் முன் அனுமதியின்பேரில் பணியினை மேற்கொண்டதையும் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 214 / 2019, நாள் : 04.09.2019</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் 08/2019 முதல் வார்டு எண். 11 முதல் 21 வரை உள்ள பகுதிகளில் ஏற்படும் குடிநீர் குழாய் பழுதுகளை பழுது நீக்கம் செய்ய மதிப்பீடு அங்கீகாரம் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தற்பொழுது குடிநீர் அவசர அவசியம் கருதி பராமரிப்பு பணிகள் அவ்வப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே புதியதாக ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணி உத்தரவு வழங்கும்வரை ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த விலையில், அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தாரரை 08/2019 மாதம் மட்டும் பணியினை மேற்கொள்ள அங்கீகாரம் வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 1,50,000 /–ம் அனுமதிக்காக.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியில் அவசர அவசியம் கருதி ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தாரரை தனி அலுவலர் / ஆணையாளர் அவர்களின் முன் அனுமதியின்பேரில் பணியினை மேற்கொண்டதையும் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 215 / 2019, நாள் : 04.09.2019</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 05.03.2019–ந் தேதிய ந.க.எண். 31159 / 2018 / டிபி3–ன் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்படி விதி 14–ல் கட்டிட அனுமதிகாலம் 5 ஆண்டுகள் எனவும் மற்றும் ஒருமுறை கால நீட்டிப்பு காலம் மூன்றாண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டதன் அடிப்படையிலும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920–ன்படியும் திருத்தப்பட்ட கட்டண அட்டவணை மாற்ற மன்றத்தீர்மானம் எண். 105 / 2019, நாள். 08.03.2019 அனுமதி வழங்கப்பட்டதன்படி மேற்படி திருத்தப்பட்ட கட்டணத்திற்கு ஆட்சேபனை மற்றும் ஆலோசனை இருப்பின் இவ்வறிவிப்பு கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் தெரிவிக்கக்கோரி பொதுமக்களுக்கு மாலைமுரசு, கோவை பதிப்பு மற்றும் தினத்தந்தி, திருப்பூர் பதிப்பு ஆகிய தினசரி நாளிதழ்களில் 06.08.2019–ல் விளம்பரம் வெளியீடு செய்யப்பட்டும் உள்ளூர் அரசு அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்கு விளம்பரப் பலகையில் வெளியிடப்பட்டும் நாளது தேதி வரை எவ்வித புகார்கள் மற்றும் ஆட்சேபனை,

ஆலோசனைகள் இவ்வலுவலகத்திற்கு வரப்பெறவில்லை. எனவே மேற்படி மன்றத்தீர்மானம் எண். 105 / 2019, நாள். 08.03.2019–ல் அனுமதிக்கப்பட்ட திருத்திய கட்டிட உரிமக் கட்டணத்தை ஊர்ஜிதம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) திருத்திய கட்டண அட்டவணையை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண். 221 / 2019 / எப்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 216 / 2019, நாள் : 04.09.2019</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11, சொரியங்கிணத்துப்பாளையம் சாலை ரீ.ச.எண். 403 / 1சி–ல் 2.27 ஏக்கர் மனைப்பிரிவு அனுமதி கோரியது சேலம் நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 2045 / 2018 / சேம–3, நாள். 31.12.2018–ல் பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகள் ஒப்படைக்கத் தெரிவிக்கப்பட்டது. மேலும் மேற்படி மனைப்பிரிவில் அபிவிருத்தி பணிகள் மேற்கொண்டு நல்லமுறையில் தரமாக அமைக்கப்பட்டதற்கு பொறியாளர் சான்று வழங்கவும் அறிவுறுத்தப்பட்டதில், இந்நகராட்சிப் பொறியாளரின் குறிப்பில் மேற்படி மனைப்பிரிவில் அமைக்கப்பட்ட தார்சாலைகள் போக்குவரத்திற்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளதாகவும், மேலும் அடிப்படை வசதிகள், மழைநீர் வடிகால், பகிர்மானக் குழாய் அமைக்கப்பட்டுள்ளதாகவும், தெருவிளக்குகள் அமைக்க மொத்த சாலையின் நீளம் 189 மீட்டர் நீளத்திற்கு 10 மின்கம்பங்கள் மற்றும் விளக்குகள் அமைக்க (10 x 20000) ரூ. 2,00,000 /–ம் இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்தவும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி மனுதாரர் தெருவிளக்குகள் அமைக்க ரூ. 2,00,000 /–த்தை பற்றுச் சீட்டு எண். 159 / 01 / 03 / 19–20 / 0003715 செலுத்தியுள்ளார். எனவே மேற்படி மனைப்பிரிவில் சேலம் நகர் ஊரமைப்புத் துறையில் மனைப்பிரிவு வரைபடம் ஒப்புதல் வழங்க உத்தேச வரைபடத்தில் மனைப்பிரிவு சாலைகளின் மொத்த பரப்பு 25608.30 சதுர அடி மற்றும் மூலை முடக்கு 212.50 சதுர அடி ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு 7414.05 சதுர அடி இடத்தை நகராட்சிக்கு தானமாக பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகளின் பரப்பு 25608.30 சதுர அடி மற்றும் மூலை முடக்கு 212.50 சதுர அடி மனைப்பிரிவில் ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு 7414.05 சதுர அடி இடத்தை தானமாக பெற மன்றம் ஏற்கலாம்.
2) மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பூங்கா பரப்பு தானமாக பெற்ற பின் நகராட்சிக்கு உட்பிரிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம். (கோப்பு எண். 599 / 2018 / எப்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 217 / 2019, நாள் : 04.09.2019</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 31159 / 2018 / டிபி3, நாள். 05.03.2019–ந் தேதிய சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்படி கட்டிட உரிமகட்டணங்கள் திருத்தி அமைக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண். 105 / 2019, நாள். 08.03.2019–ல் அனுமதிக்கப்பட்டதை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்து தரக்கோரி கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் அவர்களின் வெளியீட்டு ஆணை எண். 184 / 2019 / ஒப்பந்தப்புள்ளி / விளம்பரம் / 2019, நாள். 05.09.2019–ன்படி மாலைமுரசு கோவை பதிப்பகத்தில் பக்கம் எண். 06, நாள். 06.08.2019–ல் வெளியிடப்பட்டதற்கு பட்டியல் தொகை ரூ. 78,750 /– வழங்கக் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்படி பட்டியல் தொகை மாலைமுரசு கோவை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 221 / 2019 / எப்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 218 / 2019, நாள் : 04.09.2019**

சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். 15436 / 2015–ல் தனக்கு துப்புரவு பணியாளர் பணியிடம் வழங்காததால் திருமதி. டி. இராதாமணி, க/பெ. செல்வக்குமார் என்பவரால் தொடரப்பட்ட வழக்கில் மூன்றாம் பிரதிவாதியாக ஆணையாளர், வெள்ளகோவில் நகராட்சி அவர்களை சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை நகராட்சி சார்பாக வாதி மன்றத் தீர்மானம் எண். 15 / 2016, நாள். 01.02.2016–ல் திரு. கே. ராஜ்குமார், வழக்கறிஞர் அவர்களை நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி வழக்கில் M.P.No. 2/2015, நாள். 22.04.2019-ல் தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்படி அசல் தீர்ப்புரை பெற்று இந்நகராட்சி வழக்கறிஞர் திரு. கே. ராஜ்குமார் அனுப்பி உள்ளார். மேலும் எனது 23.04.2019–ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளபடி, மேற்காணும் வழக்கிற்கு ரூ. 25,000 /–ம் 6 hearing-க்கு நடைபெற்று இறுதி தீர்ப்பு பெற்றுள்ளதாகவும், மூத்த வழக்கறிஞர் என்ற முறையிலும், மேற்படி தொகை வழங்குமாறு கோரியுள்ளார். எனவே மேற்படி தொகையை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 973 / 2013 / சி1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 219 / 2019, நாள் : 04.09.2019**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 21.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | அம்மா உணவகத்தில் சமையல் உபகரணங்கள் பழுது சரிசெய்தல் | 100000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 6.98 % மதிப்பீட்டைவிட அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 7.67 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

இதில் குறைவான ஒப்பந்த விகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்த விதிகளின்படி விலைகுறைப்பு செய்து தர கோரியதில் கீழ்காணும் விபரப்படி விலைகுறைப்பு செய்து தர ஒப்பந்ததாரர் சம்மதக் கடிதம் அளித்துள்ளார்.

| ஒப்பந்ததாரர் பெயர் | ஏற்கனவே கோரிய ஒப்பந்த விகிதம் | தற்பொழுது விலைகுறைப்பு செய்த ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| வீரா கன்ஸ்ட்ரக்சன் | 6.98 % மதிப்பீட்டைவிட அதிகமாக | 4.90 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

மேற்படி ஒப்பந்ததாரரின் விலைகுறைப்பு ஒப்பந்த விகிதத்தை அங்கீகாரம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலின்பேரில் வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 609 / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 220 / 2019, நாள் : 04.09.2019</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 21.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11 முதல் 21 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் குழாய் பழுதுகள் சரிசெய்தல் | 1000000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 0.36 % மதிப்பீட்டைவிட அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 3.31 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

<u>அலுவலககுறிப்பு</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், துரைராமசாமி நகர், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 609 / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 221 / 2019, நாள் : 04.09.2019</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 21.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 10 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் குழாய் பழுதுகள் சரிசெய்தல் | 1000000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 0.45 % மதிப்பீட்டைவிட அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 2.90 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

<u>அலுவலககுறிப்பு</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், துரைராமசாமி நகர், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 609 / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 222 / 2019, நாள் : 04.09.2019</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 21.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 10 வரையுள்ள பகுதிகளில் மின்மோட்டார் பழுதுகள் சரிசெய்தல் | 1000000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 0.14 % மதிப்பீட்டைவிட அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 2.51 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

அலுவலககுறிப்பு

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், துரைராமசாமி நகர், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 609 / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 223 / 2019, நாள் : 04.09.2019**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 21.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் மின்மோட்டார் பழுதுகள் சரிசெய்தல் | 1000000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 0.05 % மதிப்பீட்டைவிட அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 2.30 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

அலுவலககுறிப்பு

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், துரைராமசாமி நகர், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 609 / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 224 / 2019, நாள் : 04.09.2019**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 22.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வீரக்குமார் நகர் கட்டண கழிப்பறை பழுதுகள் சரிசெய்தல் | 160000 | ஆர். சிங்காரம் | 7.74 % மதிப்பீட்டைவிட அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 8.95 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

இதில் குறைவான ஒப்பந்த விகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்த விதிகளின்படி விலைகுறைப்பு செய்து தர கோரியதில் கீழ்காணும் விபரப்படி விலைகுறைப்பு செய்து தர ஒப்பந்ததாரர் சம்மதக் கடிதம் அளித்துள்ளார்.

| ஒப்பந்ததாரர் பெயர் | ஏற்கனவே கோரிய ஒப்பந்த விகிதம் | தற்பொழுது விலைகுறைப்பு செய்த ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| ஆர். சிங்காரம் | 7.74 % மதிப்பீட்டைவிட அதிகமாக | 4.93 % மதிப்பீட்டைவிட அதிகமாக |

மேற்படி ஒப்பந்ததாரரின் விலைகுறைப்பு ஒப்பந்த விகிதத்தை அங்கீகாரம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த ஆர். சிங்காரம், எல்.கே.சி.நகர், வெள்ளகோவில், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 609 / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 225 / 2019, நாள் : 04.09.2019**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் இடங்களில் உள்ள சிறுமின்விசை திட்ட HDPE hose பைப்புகள் பழுதடைந்து இயங்காத நிலையில் உள்ளது. இதனால் இத்திட்டங்களில் தண்ணீர் எடுக்க இயலாத நிலையில் உள்ளது. இதனால் பொருட்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள்.

1) புதுக்காடு
2) அகலரப்பாளையம்புதூர்
3) கணபதிபாளையம்
4) தீத்தாம்பாளையம்
5) சிவநாதபுரம்
6) சிவக்குமார் நகர்
7) தாராபுரம் ரோடு
8) திருவள்ளுவர்–2 எண்ணிக்கை
9) கச்சேரிவலசு
10) காமராஜபுரம்
11) சிவநாதபுரம்
12) குமாரவலசு ரோடு
13) தீத்தாம்பாளையம்
14) சாமிநாதன் நகர்
15) சேரன்நகர்
16) இந்திராநகர்
17) அரியாண்டிவலசு
18) கரட்டுப்பாளையம்
19) கே.பி.சி.நகர்
20) வேலகவுண்டன்பாளையம்
21) வி.பி.எம்.எஸ். நகர்
22) புள்ளசெல்லிபாளையம்
23) தீத்தாம்பாளையம் (அ) பகுதி

மேற்படி பழுதுகள் குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 10,00,000 /–ம் ஆகும். பணியினை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். / 2019 / அ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 226 / 2019, நாள் : 04.09.2019**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சிறப்பு மனுநீதி நாள் முகாமில் உப்புப்பாளையம் பகுதியில் பழுதடைந்த நிலையில் உள்ள கிணறு சுற்றுசுவரை சரிசெய்து வழங்குமாறும், மூடி அமைத்து தரவும், உப்புப்பாளையம் மற்றும் குட்டக்காட்டுப்புதூரில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்து வழங்குமாறும் கோரி மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. மேற்படி பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினம் ரூ. 3,00,000 /–ம் ஆகும்.

அலுவலககுறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1200 / 2019 / அ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 227 / 2019, நாள் : 04.09.2019**

நகராட்சிக்குட்பட்ட காடையூரான்வலசு பகுதியில் ஏற்கனவே உள்ள தண்ணீர் தொட்டி மிகவும் பழுதடைந்துள்ளதால், இடிந்து விழும் நிலையில் உள்ளதாகவும், மேலும் மின்மோட்டார் அறை பழுதடைந்து அவ்வப்போது மின்கசிவு ஏற்படுவதாகவும், இதனை சரிசெய்ய புதியதாக நீர்தேக்கத் தொட்டி மற்றும் மின்மோட்டார் அறை அமைத்துத் தரக்கோரி மாண்புமிகு முதலமைச்சர் குறைதீர்க்கும் நாள் முகாமில் மனு அளித்துள்ளனர். மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ. 1,50,000 /—ம் ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1200 / 2019 / அ1)

**தீர்மானம் — அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) திரு. அ. சங்கர்
தனி அலுவலர் /
ஆணையாளர்
வெள்ளகோவில் நகராட்சி
திருப்பூர் மாவட்டம்